589

OFFICE OF THE REGISTRAR OF ...
17 JAN 1940

Reg. No. M. 1354

போதனு விஷய பூங்கொத்து

மாதமோருமுறை மலரும்.

கொத்து 30

மலர் 6

Editor & Publisher:

Rev. Fr. A. LOURDUSWAMI, B.A., L.T.,

R. C. Secondary Training School, Trichinopoly.

15 டிசம்பர் 1939

...றை பாடசாலை, திருச்சினுப்பள்ளி.

...ருஷ சந்தா ரூபாய் 1

JC
M24, M11PP
N39.30.6.
182464.

BODHANA VISHAYA POONGOTHU
Magazine
of
Educational Topics & School Methods.

பொருளடக்கம்

		பக்கம்
1.	பத்திராதிபர் குறிப்புகள்	121
2.	சென்னை கல்வி இலாகா விதிகள்	124
3.	காவியத்தில் ஓவியம்	125
4.	பாடக் குறிப்புகள்	127
5.	உலக சமாதானப் பா	131
6.	பாம்புக்கடி விஷம்	132
7.	காவிரியின் பிரவாகம் (நான் கண்ட காக்ஷி) ...	134
8.	ஒரு பெரீஇஇஇஇய அப்பா	137
9.	பாடசாலை நிகழ்ச்சிகள்	140
10.	விடுகதைகள்	141
11.	அபிநயப் பாட்டு (Action Song)	143

Imprimatur: ✠ JAMES,

Bishop of Trichinopoly.



OF THE REGISTRAR OF BO
JAN 1940

போதனா விஷயப் பூங்கொத்து

கொத்து 30] 15 டிசம்பர் 1939 [மலர் 6

பத்திராதிபர் குறிப்புகள்

ஆரம்பப் பாடசாலைகளில் சரீரதண்டனைகள் விதிக்கப்படும் விஷயமாக துரைத்தனத்தார் சமீபத்தில் பிறப்பித்துள்ள சட்டத்தைப்பற்றி நாம் பெரிதும் உவப்பு எய்துகிறோம். அச்சட்டம் மாணவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் ஓர் பெரும் நன்கொடை என்றே சொல்லவேண்டும். எனினும் அவ்விஷயத்தைப்பற்றி இரண்டோர் வார்த்தைகள் ஈண்டு குறிப்பிடுதல் வியர்த்தமாகாதென நம்புகிறோம்.

பாடசாலையின் நிர்வாகம் ஒழுங்குபெற நடைபெற இடையூறாய் உள்ள மாணவர்களைத் திருத்த ஏற்படுத்தப்பட்டுள்ள பல்வேறு தண்டனை முறைகளுள், சரீர தண்டனையும் ஒன்று; ஆனால் இத்தகைய சரீர தண்டனை விதிக்கப்படுவது முறையா, என்பதுதான் பெரியதோர் பிரச்னை. இவ்விஷயமாக பலபேர் பல முரண்பாடான அபிப்பிராயங்கள் கொண்டுள்ளாராதலின், இது விஷயமாக அனைவரும் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளக்கூடிய அபிப்பிராயமொன்றை நாம் வெளியிடுவதற்கில்லை. “அடிமேல் அடியடித்தால், அம்மியும் நகரும்,” என்னும் வாக்கை, வார்த்தைப்படி பின்பற்றும் சிலர், பிரய

படி அவசியம் வகுப்பறைகளில் பிரயோகிக்கப்பட வேண்டுமென வற்புறுத்துகின்றனர். ஆனால் மற்றொரு சாரார், 'ஜனநாயகக் கொள்கைகள் தாண்டவமாடும் இந்த நவீன நாகரீகக் காலத்தில், ஒவ்வொரு தேசமும், ஒவ்வொரு நாட்டினரும், தமக்குச் சுதந்தரம் வேண்டும், சுயேச்சை வேண்டும்," என்று சுதந்தரத்துவத்திற்காகப் போராடும்பொழுது, இத்தகைய கொடூர அனாகரீக தண்டனைகள் அடியோடு மறைய வேண்டுமென பாடுபடுகின்றனர். இன்னும் பற்பல கல்வித்துறை நிபுணர்களும், பாடசாலைகளை நிர்வகித்து அனுபோகப்பட்ட பேராசிரியர்களும், சரீர தண்டனைகள் பாடசாலைகளில் வழங்கப் படவேண்டுமென்று கூறுவதும் நாம் காணக்கூடியதே.

எது எங்ஙனமாயினும், ஓர் பாடசாலையில் சிறுவர்மாட்டு சற்றேனும் அனுபோகப்படாத ஆசிரியனால் சரீரதண்டனை விதிக்கப்படுவது, அப்பாடசாலைக்கும், ஆசிரியர்களுக்கும், பிள்ளைகளுக்கும் ஊறு விளைவிப்பதாகுமென்பது யாவரும் ஒப்புக்கொள்வர். அனேகமாக, சிறுவர்கள் செய்யும் குற்றங்களைக் கண்டிக்க, அவர்களை **'இயற்கைத் தண்டனைக்கே'**, விட்டு விடுவதுதான் சிறந்ததாகவும், பயனுடையதாகவும் கருதப்படுகின்றது. உதாரணமாக, ஓர் சிறுவன், "நெருப்பில் கையை வைக்காதே," என்ற கட்டளையை மீறிநடக்கிறான் என்று வைத்துக் கொள்வோம். அவனுக்கு **"இயற்கைத் தண்டனை,"** கை சுடப்படுவதுதான்; அதினின்றும் அவன் ஓர் நல்ல பாடம் கற்பதுமன்றி மறுமுறை புத்திசாலியாகவும் நடந்துகொள்கிறான்.

சமீபகாலத்தில், மிகமுரட்டுத்தனமாக, மனிதத்தன்மைக்கே அடாத சில தண்டனைகள், பரிதாபம்! ஆதரவற்ற சிறுவர்கள் மீது விதிக்கப்படுவதாகக்கேள்விப்பட்டு நாம் மனம்வருந்தாமலில்லை. எனவே இத்தகையக் கொடூர தண்டனைகளை அடியோடு வேர் அறுக்க கவர்ண்மெண்டார் முன்வந்ததில் யாதொரு ஆச்சரியமுமில்லை. எனவே தண்டனைகளைத் தகுந்த முறைகளில்லாமல் துர்ப்பிரயோகம் செய்ய சிலர் எழுந்ததே, ஷிக்ஷாதண்டனைச் சட்டத்திற்குக் காரணம் என்பதில் சந்தேகமில்லை.

182464

எப்படியிருந்தபோதிலும், அனுபவமும், திறனும் வாய்ந்த உத்தம ஆசிரியர்கள் மாணுக்கர்களைத் தமது கண்காணிப்பின்கீழ் பயிற்றி வரும்பொழுது, கடின குற்றங்களை ஒழிக்கப் பல சாதனங்களைக் கையாடியும் பயனில்லாவிடில், மாணவரின் முன்னேற்றத்தைக்கோரி, கடைசிமுறையாக, ஏதோ அற்பசொற்ப சரீர தண்டனைகள், மாணவரின் வயது, உடல் நிலைக்குத் தக்காப்போல் விதித்தால் பயனடையலாகாதா?

* * *

1940-ம் ௵ மார்ச்சு மாதத்தில் T. S. L. C. பரீட்சை எழுதப்போகும், தவறிப்போன நமது பழைய மாணவர்கள், வேறு ஸெண்டர்களில் (centres) பரீட்சை எழுதுவதாய் இருந்தால், இப்பாடசாலையில் பயின்றதாக ஓர் அத்தாட்சிப் பத்திரம் (Identification certificate) இப்பாடசாலைத் தலைமையாசிரியரிடமிருந்து முன்னதாகவே பெற்றுக்கொள்ளவேண்டியது அவசியம். ஆகவே அப்படிப்பட்டவர்கள், தபால் சார்ஜுக்காக ஸ்டாம்பு (stamp) அனுப்பி ஷை ஸர்ட்டிபிக்கேட்டை எம்மிடமிருந்து பெற்றுக்கொள்ளக்கடவர்.

* * *

நமது "பூங்கொத்து" வெகுவாய் நன்கு மதிக்கப்பெற்று வருவதுடன், பலர் அதன் புதுச் சந்தாதார்களாகச் சேர்ந்திருப்பதைப்பற்றி நாம் மிகவும் மகிழ்வுறுகிறோம். அன்றியும் நமது பத்திரிகை நேயர்களுக்கு எமது மனமார்ந்த நன்றியையும் சமர்ப்பிக்கின்றோம்.

இன்னும் பலர் புதுச்சந்தாதார்களாகச் சேர்ந்து நமது பத்திரிகையை ஆதரித்துப் பயனடைவார்களாக.

* * *

We wish all our Subscribers and well-wishers a most **Happy Christmas** and a very **Prosperous New Year.**

சென்னை கல்வி இலாகா-விதிகள்

Amendments to the Madras Educational Rules and Grants-in-Aid Code

(Fort St. George Nov. 4, 1939; G. O. M. S. No. 2489 Education.)

சென்னை கல்வி இலாகா-திருத்த விதிகள்

(Fort St. George Gazette pp. 724 Part I-B Nov. 14, 1939.)

ஐம்பத்தைந்து வயது பூர்த்தியான எந்த ஆசிரியரையும் ஒரு பாடசாலையில் நியமனம் செய்யவோ, அல்லது தொடர்ந்து வேலைபார்க்க அனுமதிக்கவோ கூடாது. ஆனால் **ப்ரைவேட் மானேஜ்மெண்டுக்கு** (Private management) உள்பட்ட ஆசிரியர்கள் விஷயமாய், விசேஷ காரணங்களை முன்னிட்டு **கல்வி டைரெக்டர்** (Director of Public Instruction) இந்த விதியை வற்புறுத்தாமல் விடலாம். ஆயினும் எந்த முகாந்தரத்தைக்கொண்டும், **அறுபது** வயதுக்கு மேற்பட்ட ஆசிரியர்கள் வேலையைத் தொடர்ந்து பார்க்க அனுமதிக்கப்படமாட்டார்கள்.

ஷை விதியையொட்டி கிராண்டு வழங்குகையில், சாதாரணமாய் ஐம்பத்தைந்து வயதுக்கு மேற்பட்ட ஆசிரியர்களுக்கு **கிராண்டு** அளிக்கப்படமாட்டாது. ஆனால் மேலே கூறியபடி விசேஷ காரணங்களை முன்னிட்டு ஆசிரியர்களின் அறுபதாவது வயது வரையில் கிராண்டு வழங்க **டைரெக்டர்** உத்தரவிடலாம்.

[இவ்விதி 1940-ம் ௵ ஜுலை-௴ 1-ம் தேதியிலிருந்து அமுலுக்கு வரும்.]

Addition to the Rules relating to Recognition of Elementary Schools

[Fort St. George, Nov. 7, 1939, G. O. Ms. No/2513 Education.]

ஆரம்பப் பாடசாலைகளின் அங்கீகார விஷயமான உபவிதி

(Fort St. George Part I-B page 724. Nov. 14, 1939.)

பின்வருமாறு:—ஆரம்பப் பாடசாலைகளில் படிக்கும் மாணவர்கள்மட்டில் **சீர தண்டனை** (Corporal Punishment) விதிக்கப்படக்கூடாது.

காவியத்தில் ஓவியம்

M. A. S. Udayar.

இதற்குமுன் சில இதழ்களில் காவியத்தில் ஓவியம் என்ற தலைப்பின் கீழ்ச் சில புலவரோவியங்களை ஆராய்ந்தாம். இவ்விதழில் அவற்றையொட்டியே சிறிது ஆராய்வாம்.

உலகிற்காணும் இயற்கைப் பொருள்களையும் செயற்கைப் பொருள்களையும் ஒரு காவியன் காணுங்காட்சி வேறு; ஒரு ஓவியன் காணுங்காட்சி வேறு; பிறர் காணுங்காட்சி வேறுமன்றோ? மேலுந் தாங்காணுங் காட்சிகளைப் பிறர்க்கு உணர்த்துந்தகைமையும் வேறுபடுகின்றன. ஓரோவியன் தான் கண்டானந்தித்து அனுபவித்தவற்றை இவ்வையகமும் கைக்கொள வேண்டித் தான்பார்த்தவாறே சில வடிவங்களாக அமைக்கின்றான். அவ்வடிவங்கள் தாமும் பெரும்பாலும் பிறர் விளக்கினாலும் கட்புலன்கட்கன்றி உட்புலன்கட்கு மகிழ்வளிப்பனவல்ல. ஆனால் சிலவோ எனின் பார்த்த அளவிலேயே கண்ணுமனமுங்களிப்புக் கடலில் மூழ்கத் தன்னுணர்வற்றுத் தத்தளிக்கு நிலையைக் காண்பாற்களிக்கின்றன.

பின்னர்க் கவியோவியங்களோவெனின் பெரும்பாலன பார்த்த அளவினும் சிறுபான்மைய அந்நுணுக்க மாய்ந்தார் சிறிது விளக்கிய அளவினுங் கேட்டார் மனங்களைக் கொள்ளை கொண்டு பரவசமுறுவிக்கின்றன. மேலும் உருவச் சித்திரங்கள் போற் பிறர்க்குக் கட்புலனுக்குக் காட்டியுணர்த்தப்படும் அவசியமற்று சொல் மாத்திரையில் விளங்கவல்லதெனல் மிகையாகாதன்றே?

இந்நணமாய ஓவியங்கள் தமிழ்க் காவியங்களில் அளப்பிலவாயிருப்பன. அவற்றுள் சத்தியமறைக்குரிய உத்தமக் காப்பியமாக விளங்குந் தேம்பாவணியுள் யான்கண்ட சிலவற்றை ஈண்டெடுத்துக் கூறுவேன். சங்கைக்குரிய தந்தை 'பெஸ்கி' என்றும், தைரியநாதர் என்றும் வழங்கப்பெறும் திருப்பெயர்களைக்கொண்ட **வீரமாமுனிவர்,** தம் காப்பியத்துள் முதற்கண் நாட்டுப்படலங்கூறுவான் றொடங்கி மழைவளங்கூறு முகத்தான் வான்றோற்றத்தைத் தாங்கண்டவாறு விளக்குகின்றார்; அவர் காண்பன :—

ஆகாய முழுதும் மேகப்படலங்கள் செறிந்திருக்கின்றன; அவை வெண்ணிறமாகத் துலங்குகின்றன; அவை விரைந்து செல்லுகின்றன; சென்று கடலிற் படிகின்றன; ஆண்டுக் கடல் நீரைத் தம் வயிறுநிரம்ப உண்ணுகின்றன; மீட்டும் அக்கடலினின்று எழுகின்றன; உண்டு கனை யகன்றமையின் மிக விரைவாகத் தாங்கொண்ட வியத்தகும் உருவோடு வானிடஞ் சேருகின்றன; இவற்றைக்கண்ட ஆசிரியர் அக்காட்சியை உருவகத்தோடு பொருத்தி வரையும் ஓவியம் கண்டார் கேட்டார் மனத்தைக் கொள்ளைக்கொண்டு விளங்குகின்றது. ஓவியம் வருமாறு:

" புள்ளுலாம் விசும்பிடைதொறும் பொரும் படைபொருவ
எள்ளுலாமழை வெண்கொடியுருக்கொடு விளங்கித்
தெள்ளுலாந்திரை திளைப்பவுண்டெழுந்துயர் பரந்து
வள்ளுலாங்கருமத கரியினமெனத்தோன்ற "

இச்செய்யுளின் பொழிப்பாவது பறவைகள் இயங்கும் வானிடமெங்கும் உலவித்திரியும் போர்ச்சேனைகளைப்போன்று எழுந்த வெண்மேகங்கள், போர் மேற்கொண்டார் பற்றிச்செல்லும் வெண்கொடிகளை நிகர்ப்பமுன்பு வெண்ணிறமாகத் தோன்றிப் பின்பு தெளிந்த அலைகளை உடைய கடல்நீரை நிறையக்குடித்து மேலே எழுந்து பரவிச்சென்று, அப்போர்வீரர்களாற் கொண்டு செலுத்தப்படும் மதங்கொண்ட யானைத்திரள்களையொத்துக் கரியனவாய் வானிடமெங்கு மறையும்படி காணப்பட்டன. என்பது; இச்செய்யுட் சித்திரத்துள், ஓவியக்கலைஞர் மேகத்தைப் படைவீரர்களாகவும், அவர் பற்றுங்கொடிகளாகவும், அவர் போர்மேற் செலுத்தும் யானைகளாகவும் உருவகப்படுத்துகின்றார்.

மேலும் ஆசிரியர் பருவமேகம் இடையறாது குழுமிய காட்சியை 'விசும்பிடைதொறும் பொரும் படைபொருவ' எனவும், அம்முகிலின் தோற்றத்தை வெண்கொடியுருக்கொடு விளங்கிற்றெனவும், அவை நீருண்டு விளங்கலை திரைதிளைப் பவுண்டு எழுந்து எனவும், மீண்டமுகிற்குழாம் வெண்ணிறமகன்று கருநிறங்கோடலை மதகரியினமெனத் தோன்றிற்றெனவும் கூறி நமது மனமாகிய திறையில் ஓர் புகைப்படம் போற்காட்டுங் காட்சி கண்டு கேட்டு இன்புறுதற்குரிய தேயன்றோ?

(தொடரும்)

பாடக் குறிப்பு

R. Pitchai Pillai.

பாடம்	வகுப்பு	நேரம்
பூகோளம்	IV Std.	40 நிமிஷம்

நோக்கம் :—ஓடும் மழை ஜலம் செய்யும் வேலைகளையும், அதனால் ஏற்படும் நன்மை, தீமைகளையும்பற்றிக் கற்பித்தல்.

குறிப்பு :—மழை பெய்யும்போது, அல்லது மழை பெய்துமுடிந்த பிறகு ஊர்ப்புறம் அழைத்துச்சென்று காட்டி இப்பாடத்தைப் போதிக்கவும்.

டெல்டா, நீர்வீழ்ச்சி முதலியவற்றை விளக்கக்கூடிய கரும் பலகை உருவப் படங்களை வரையலாம்.

விஷயம்	**முறை**
பீடிகை : (1) கடல், ஏரி, குளம், குட்டை முதலியவற்றின் ஜலம் சூரிய வெப்பத்தால் நீராவியாகி, மேலே சென்று மேகங்களாக மாறும். இம்மேகங்கள் உயர்ந்த மலைகளின் குளிர்ந்த சிகரங்களில் மோதியும், குளிர் காற்றுப் பட்டும் மழையாகப் பெய்கிறது.	மழை உண்டாகும் விதம் எப்படி ? என வினவி முன்னறிவைச் சோதிக்கவும்.
(2) ஜலம் எப்போதும் மேட்டிலிருந்து பள்ளமான இடத்தை நோக்கியே ஓடுகிறது.	தண்ணீரின் இயற்கைக் குணம் யாது ? என வினவவும்.

விஷயம்	முறை
பாடம், வேலைகள் :	
(1) மலையிலிருந்து ஓடிவரும் மழைத்தண்ணீர் பல அருவிகளாகும். பல அருவிகள் ஒன்று சேர்ந்து நதியாகப் பாயும். நதி மேடுபள்ளத்தை அனுசரித்துப் பள்ளத்தைச் (கடல்) சேரும் வரை ஒரு வழியைத் தேடிக் கொள்ளும்.	உதாரணமாக மேட்டில் பெய்யும் மழைஜலம் எப்படி, எங்கே செல்லுகிறது எனக் கேட்டு விளக்குதல். பிள்ளைகள் பார்த்ததை ஞாபகப் படுத்துதல்.
(2) இப்படி ஓடும்போது வழியிலுள்ள சிறுசிறு மேடுகளைப் பள்ளமாகவும், பள்ளங்களை மேடுகளாகவும் ஆக்கிவிடுகிறது.	மழை ஜலம் ஓடும் விதத்தைப் பிள்ளைகள் தமது ஊர்களில் தெருக்களிலும், பிற இடங்களிலும் பார்ப்பதை ப்ரஸ்தாபிக்கவும்.
சமவெளிகளில் ஓடும்போது கரைகளை உடைத்துக்கொண்டு அதிக அகலமாகிறது. மேலும் ஓடும் பாதையில் குறுக்கே ஒரு மேடான பாகம் இருந்தால், நதியில் ஓடும் ஜலம் இரண்டு பாகங்களாகப் பிரிந்து ஓடும்.	இவ்விஷயத்தை, ஊர்ப்புறத்தில், பள்ளிக்கூட காம்பவுண்டில் அல்லது சுற்றுப்புறத்தில் காட்டி விளக்கவும்.
(3) இவ்வாறு வெகுதூரம் ஓடுவதால், வேண்டிய மணலை அரித்துக்கொண்டு போய் சங்கமாகும் கடல் ஓரத்தில் சேர்க்கிறது. அந்த முகத்துவாரத்தில் அலைகள் அடித்தும் மணல் மேடுகள் உண்டாகின்றன. நதியானது இவ்விடங்களில் பல பாகங்களாகப் பிரிந்து, நடுவிலுள்ள பாகத்தை டெல்டாவாகச் செய்கிறது. பிறகு கடலோடு சங்கமாகிறது.	தெருக்களிலும், இன்னும் பார்வையிட்ட இடங்களிலும் ஓடும் ஜலம் ஒரு குட்டை அல்லது பள்ளத்தில் விழும்போது இவ்விதம் அமைவதைப் பார்க்கச் செய்யவும். படம் வரைந்தும் காட்டலாம்.

விஷயம்	முறை
(4) மழை ஜலம் நதிகளில் செல்லுகையில் வரும் வழியிலுள்ள பற்பல வண்டல்களைக் கொண்டுவந்து கரையோரங்களிலும், டெல்டாக்களிலும் ஒதுக்குகிறது.	மழை பெய்து முடிந்தபின் காய்ந்த இலைகள் அழுகிய தாவரங்கள் முதலியன ஓரங்களில் ஒதுக்கப்பட்டிருப்பதைக் காண்பித்து விளக்கலாம். நதிகளின் கரைகளில் தண்ணீரோடு வரும் பிணங்கள், பொருள்கள் முதலியன ஒதுங்குவதையும் ஞாபகப்படுத்தலாம்.
(5) மலைநாடுகளில் நதி ஓடும்போது உயர்ந்த இடத்திலிருந்து பள்ளத்தில் வேகமாய் ஜலம் விழுந்து நீர்வீழ்ச்சியையும் ஏற்படுத்தும்.	மதகின் வழியாய் பள்ளத்தில் ஜலம் விழும் உதாரணத்தைக்கொண்டும், படம் வரைந்தும் விளக்கலாம்.
நன்மைகள் :	
(1) நதியின் ஜலத்தைக் குடிக்கவும், குளிக்கவும் இன்னும் பல உபயோகங்களுக்கும் மனிதர்கள் பயன்படுத்திக்கொள்ளுகிருர்கள்.	பட்டணங்கள், கிராமங்கள் முதலிய இடங்களிலுள்ள தண்ணீர் வசதியைச் சம்பந்தப்படுத்துதல்.
(2) நதியின் ஜலத்தை ஏரி, குளம் முதலியவற்றில் சேகரித்து, நல்ல விளைச்சல்களுக்காக உபயோகப்படுத்துகிருர்கள்.	தெரிந்த குளம், ஏரி இவைகளில் ஜலம் வந்து சேருவதைப்பற்றிக் கூறுதல். நெல், கம்பு, வாழை, கொடிக்கால் முதலிய விளைபொருள்களைச் சொல்லச் செய்யவும்.
(3) சிலர் வாய்க்கால்கள் மூலம் ஜலத்தைக் கொண்டுபோய் விவசாயம் செய்கிருர்கள்.	வயல்களைப்பற்றிச் சொல்லுதல். சில வாய்க்கால்களின் பெயர்களைக் கூறச் செய்தல்.

விஷயம்	முறை
(4) வண்டல்கள் கலந்துள்ள ஆற்றங்கரைப் பாகங்களும், டெல்டாக்களும் செழிப்பாகின்றன. (5) நீர்வீழ்ச்சிகளினுல் மின்சாரசக்தி எடுக்கப்படுகிறது. தீமைகள் : மழை அதிகமாகப் பெய்வதால் தண்ணீர் ஏராளமாக ஓடிவந்து, பேரோடைகளிலும், நதிகளிலும் ஓடுவதற்கு இடமில்லாமல் கரைபுரண்டு பக்கத்திலுள்ள பயிர்களையும், ஊர்களையும் நாசம் செய்கிறது.	நிலங்களுக்கு எருப்போடுதலையும், எருவில் கலந்துள்ள பல பொருள்களையும் சம்பந்தப்படுத்தி விளக்குதல். மதகின் வழியாய்ச் செல்லும் ஜலத்தின் வேகத்தையும், பாரமான பொருள்கள் ஜலத்தால் தள்ளப்படுவதையும் சம்பந்தப்படுத்தி விளக்கவும். உ-தாரணமாகச் சமீபத்தில் வெள்ளப்பெருக்கால் விளைந்த கஷ்டநஷ்டங்களைப்பற்றி எடுத்துக்கூறி விளக்கவும். கிராமங்கள், வீடுகள், பயிர்கள், ரயில் பாதைகள் நாசமாகுதலையும், ஜனங்களும், பிராணிகளும் வெள்ளத்தில் மடிவதையும் சொல்லலாம்.

பரீக்ஷைக் கேள்விகள்

1. நதிகள் எவ்வாறு உண்டாகின்றன ?

2. நதிகள் ஓடும்போது செய்யும் பல வேலைகளில் மூன்றைக் கூறு.

3. டெல்டா, நீர்வீழ்ச்சி இவைகள் எப்படி உண்டாகின்றன ?

4. மழை ஜலத்தால் ஏற்படும் நன்மை தீமைகள் யாவை ?

க. ப. சு.

1. வேலை :— அருவிகளும், நதிகளும் ஏற்படுகின்றன. மேட்டைப் பள்ளமாகவும், பள்ளத்தை மேடாகவும் செய்கிறது. தான் செல்லுவதற்கு ஒரு வழியைத் தேடிக்கொள்ளுகிறது.

டெல்டாக்களும், நீர்வீழ்ச்சிகளும் ஏற்படுகின்றன. கரையோரங்களிலும், டெல்டாக்களிலும் வண்டல்களைக் கொண்டுவந்து சேர்க்கிறது.

2. நன்மை :— குடிக்கவும், குளிக்கவும் உபயோகப்படுகிறது. ஜலம் விவசாயத்திற்கு உபயோகமாகும். நிலம் செழிப்படைந்து விவசாயத்திற்குப் பயன்படுகிறது. நீர்வீழ்ச்சியினுல் மின்சார சக்தியை எடுக்கலாம்.

3. தீமை :— அதிக வெள்ளப் பெருக்கால் பல ஆபத்துக்களும் உண்டு.

"உலக சமாதானப் பா"

"அறுசீர் நெடிலடி யாசிரிய விருத்தம்"

A. Maria Vedanayagam.

எல்லா உலகமும் படைத்துக் காத்து இன்ப மூட்டி
சொல்லால் அரசாட்சி செய்து துன்பம் நீக்கி
எல்லார் கடைக்கண்ணுல் ஏதம் அழிக்கும் தேவ,
நல்லா என் யேசு நாத கடவுளோனே
பொல்லாப் பேயின் மாய்கையினுல் பூமியாசை மிகக்கொண்டு
நல்லாருக்கும் தீயாருக்கும் துன்பங்கொடுக்க மனங்கொண்ட
சொல்லார் கொடுமை நிறைந்தசமர் தொடுக்கும் நீசரான
வல்லார் அழித்துச் சமாதானந்தருவீர் வானர் கோனே.

புயல்காற்று ஒரு மணிக்கு 36 மைல் வீதம் வேகமாக ஓடுகிறதாம்.

சில பந்தயக் குதிரைகள், ஒரு பாய்ச்சலில் 24 அடி தாண்டிச் செல்லக்கூடியவையாயிருக்கிறதாம்.

சண்டமாருதம் 1 மணிக்கு 80 மைல் வீதம் விரைந்து செல்லுகிறது.

மெல்லிய மனிதர்கள் கொழுத்த மனிதர்களைக்காட்டிலும் சராசரி $7\frac{1}{2}$ வருடம் அதிகமாக ஜீவிக்கின்றனர்.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
182464.

பாம்புக்கடி விஷம்

S. Joseph Amalraj.

நம் தேசத்தில் விஷப் பாம்புகள் மலிந்துகிடக்கின்றன. அடிக்கடி மக்கள் அவற்றால் தீண்டப்படுகின்றனர். ஆனால் பாம்புகடித்த விஷம் என்று அறியாமலும் சுலபமாகச் செய்யக் கூடிய சிகிச்சைகளைச் செய்யாமலும் கஷ்டப்படுவதும் சிலவேளை களில் மடிவதும் சாதாரணம். இவ்வியாஸம் அக்குறையை நிவர்த்திக்க உதவியாகும்.

அறிகுறிகள் :—பாம்பு கடித்த விஷம் என்று அறிய அனேக அறிகுறிகள் உள. அவற்றுள் சில வருமாறு : வாந்தி, குளிர்ச்சி, தோல் மஞ்சள்நிறமாதல், நாசியில் இரத்தம்வடிதல், நாடி மெது வாகவும் ஒழுங்கீனமாகவும் அடித்தல், ஜன்னி கண்டு பிரக்ஞை யிழத்தல், கடிவாய் தடித்து பரவுதல், வேதனை அதிகமுண்டா தல் முதலியன.

பாம்புக்கடிக்கு செய்யலாகும் உடன் சிகிச்சைகள் அனே கம் உள. அவற்றுள் சில :—

1. கடிவாய்க்குமேல் ஒரு சிறு மரத்துண்டை வைத்து உறுதியான கயிற்றால் கட்டி, மரத்துண்டைப் பிடித்து இரண்டு மூன்று தடவை முறுக்குக.

2. ஓர் கூர்மையான கத்தியை அடுப்பில் காயவைத்துக் கடிவாயில் சிலுவைமாதிரி ஆழக் கீறி அல்லது புண்ணில்லாத வாயினால் உறிஞ்சி இரத்தத்தை வெளியேற்றுக.

3. இரத்தத்தை வெளியேற்றியபின் கடிவாயில் பெர்மாங் கனேற் ஆப் பொட்டாசியத்தைச் செலுத்தி தேய்க்கவும். அல்லது கடிவாயை விரித்துப் பிடித்து, பழுக்கக் காய்ச்சின இரும்பினால் சுடுக. அல்லது துப்பாக்கி மருந்துவைத்து கொளுத்துக, அல்லது கர்பாலிக் அல்லது நைற்றிக் ஆசிடா வது (Nitric acid) 5, 6, துளி கடிவாயினுள் விடவும்.

4. 30 துளி பிராந்தியை 30 துளி ஸ்பிரிட்ஸ் ஆப் அம்மோனியாவுடன் ஒரு தேக்கரண்டி ஜலத்தில் கலந்து கால்மணிக்கொருமுறையாக நாலைந்துமுறை குடிக்கக் கொடுக்கவும்.

5. தாதுவிழுந்த தேகத்தில் சீதளம் கண்டால் கெண்டைக்கால்களிலும் நெஞ்சிலும் கடுகு போல்ற்றீஸ் கட்டி, பாதங்களிலும் விலாப்பக்கங்களிலும் வெந்நீரடைத்த சீசாக்களைச் சுற்றிவைக்கவும்.

6. 4-வது நம்பரில் கூறிய சிகிச்சை செய்யக்கூடாதபோது, சாராயம் அல்லது நவச்சார சத்துநீர் (Liquor Ammonia), அல்லது யூடி லூயிஸ் (Eu De Luce) இவைகளில் ஒன்றை சிறிதளவு கொடுக்கலாம்.

7. மேற்கூறிய மருந்துகளை அடைந்து குடிக்கக்கொடுக்க முடியாதபோது நமக்கருகில் கிடைக்கும் பின்கண்டவற்றை உபயோகிக்கவும்.—தும்பையிலை ரசத்தை, கடியுண்டவன் உச்சியைக் கீறி அதில் விட்டுத் தேய்த்து உள்ளுக்கு கொடுக்கலாம். அல்லது ஆடு தீண்டாப் பாலையை அரைத்து வெள்ளாட்டுப் பாலில் கலக்கி உள்ளுக்குக் கொடுக்கலாம். அல்லது எருக்கன் பாலைக் கடிவாயில் தடவி ஏழுமுதல் 10 துளிவரை மோரிலாவது தண்ணீரிலாவது கலந்து கொடுக்கலாம்.

8. பச்சைத்தவளை மாமிசத்தை உப்பு, நல்லெண்ணை அல்லது வெண்ணையுடன் கலந்து புசித்தால் சகல பாம்பு விஷமும் தீரும் என்பர் சிலர். ஆனல் மறுதினம்வரை நித்திரை கூடாதாம்.

ஒரு மனிதனின் சுவாசப் பைகள் 200 கன அங்குல வாயுவைக் கொள்ளக்கூடியனவாம்.

இங்கிலாந்தில் கோச் வண்டிகள் முதன்முதலாக 1569-ம் ஆண்டிலே செய்யப்பட்டதாம்.

ஒரு நல்ல தேங்காயிலிருந்து ஒரு ஆழாக்கு பால் பிழிந்தெடுக்கலாமாம்.

காவிரியின் பிரவாகம்

(நான் கண்ட காக்ஷி)

S. Sundram.

சில நாட்களுக்கு முன்னர் நமது நாட்டில் எல்லாப் பாகங்களிலும் மழையில்லை என்ற கூக்குரல் கடிதங்கள் மூலம் பல இடங்களிலிருந்தும் நமது தோழ மாணவர்களுக்கு அறிவிக்கப்பட்டது. ஆனால் இந்த மாதத்தின் துவக்கத்தில் "கருவி மாமழை கலைமகளுறு வெனவிளங்கி, இரு விசும் பிடை." மழைக்குக் கருவியாகிய மேகம், வாணியின் நிறம் போல் வெண்மையாகத் தோன்றி, குளிர்ந்தவுடன் மதயானைகளைப் போல் கருமைபூண்டு திரண்டு எழுந்து வந்து சென்னை ராஜதானி முழுதும் சென்ற நவம்பர்-மீ 11-ம் உ-இல் தொடங்கி, 16-ம் உ இரவு வரை கன மழையாக வருஷித்தது. சுமார் 15" மழை என்று கணக்கிடப்பட்டது. கன மழையினிமித்தம் இரண்டு நாட்கள் பாடசாலைக்கு ரஜாக் கொடுக்கப்பட்டது.

17-உ வெள்ளிக்கிழமை காலையில் வானம் சற்று நிர்மலமாகத் தோன்றியது. ஆதவன் தன் செவ்விய கிரணங்களைப் பரப்பி யாவர் மனதையும் களிப்புறச் செய்தான். மழையின் கனத்தால் பல வீடுகள் நகரில் தகர்ந்துவிட்டன. காவிரி கரை புரண்டு வருகிறது என்னும் வதந்திகள் பையன்களூடே பரவி வந்தன. சுமார் 9 மணிக்கு கனம் ஹெட்மாஸ்டர் சுவாமியவர்கள் மாணவர்களை வெள்ளம் பார்க்கப்போக அனுமதியளித்தார்கள். சில ஆசிரியர்களின் தலைமையின் கீழ் ஆசிரிய மாணவர்கள் யாவரும் அணிவகுத்துச் சென்றோம்.

பல தெருக்களைக் கடந்தோம். வழியில் பல மரங்கள் வேரற்று கோலியாத்தைப்போல் தலைவிரி கோலமாகக் கிடந்தன. பழைய கோட்டையின் சின்னமாக நிற்கும் தலைவாயிலை அடைந்தோம். ஓர்புறம் மதில் சரிந்து கற்கள் சிதருண்டு கிடந்தன. பின்னர் இந்தியாவின் ஏனைய மக்கட்கு கல்விப்பாலை ஊட்டிடும் தாயாகிய அர்ச். சூசையப்பர் கல்லூரியினை அண்மிச் சென்றோம். ஆ! என்ன பரிதாபமான காக்ஷி!! காவிரி வெள்ளம் கரைகடந்து எம் மருங்கும் செங்கடலாய்த் தோன்றியது. தண்ணீர் கட்டிடத்தை மோதிக்கொண்டு நின்றது.

சுமார் லக்ஷரூபாய் செலவு செய்து எழுப்பிய திருச்சியின் திலகமெனத்தோன்றிய காலேஜ் ஹாஸ்டல் சுமார் 5 அடி வெள்ளத்தால் நாற்புறமும் முற்றுகையிடப் பட்டிருந்தது. வானுற நோக்கி நின்ற அம்மாளிகையின் காக்ஷி, ஆ! தெய்வமே, நீயே துணை என்று சொல்வதுபோல் விளங்கியது. அற்றகுளத்தில் அறுநீர் பறவை போல் அங்கு வசித்த மாணவர்கள் தத்தம் சாமான்களை எடுத்துக்கொண்டு பரிசுகளின் மூலம் கரையேறினர் ... ... ஹாஸ்டலோ மக்களை இழந்து பரிதபிக்கும் தாயைப் போல் தோன்றியது!! ......

பிறகு அவ்விடம் விட்டு வெளிவந்தோம். ஸ்ரீரங்கம் சாலையில் 4 அடி தண்ணீர் நின்றமையால் வேறு வழியாக வந்து ஈரோடு செல்லும் ராஜபாட்டையின் வழியே வெள்ளக் காட்சியைக் கண்டு களித்துச் சென்றோம். அங்கு எம்மைப்போன்ற பல பள்ளிச் சிறார்களும் சிறுமிகளும் நகரமாந்தரும் சென்றது செங்கடலூடே இஸ்ரயேலர் சென்றது போல், காவி வெள்ளத்தோடு ஜனவெள்ளம் கலந்து சென்றது போல் இருந்தது. சிறிது நேரத்தில் குடமுருட்டி காவிரியுடன் சங்கமாகும் கோணக்கரையை அடைந்தோம்.

இயம்பொணாக் காக்ஷி. எங்கும் ஒரே வெள்ளம். ஜலம் ஜல ஜலவென்று எம் செவிகளையும் வாராவதியின் கண்களையும் துளைத்துச் சென்றது. மீன்கள் துள்ளிக்குதித்து நீரை வரவேற்றன. கடகங்களும், கட்செவிகளும் தங்கள் வளைகளில் உறைவிடமின்றி வெள்ளத்தில் மிதந்து புரண்டு சென்று கொண்டிருந்தன.

"துப்புடைக் கடலினீர் சுமந்த மேகத்தை......" எனும் கம்பர் கட்டுரையால் கடலைப்போல் தண்ணீருக்கும் ஆக்கல், அளித்தல், அழித்தல் எனும் மூன்று வல்லமைகள் உண்டு. ஆதலால் முந்நீர் என்று பெயர் வந்தது என்று தெரிகிறது. ஆறானது பல தாவரங்கள் முளைப்பதற்கு காரணமாகையால் ஆக்கல் வலிமை தோன்றுகிறது.

"ஆற்றுப் பெருக்கற்று அடிசுடு மந்நாளுமவ்வா (று)
ஊற்றுப் பெருக்கால் உல கூட்டும் ... ..."

ஆறானது நீர் வரண்ட காலத்திலும் **பெலிக்கான்** (Pelican) தன் இதயத்தைத் திறந்து குஞ்சுகளுக்கு உணவளிப்பதுபோல், ஊற்றால் தண்ணீரும் அளித்து மக்களையும், தாவரங்களையும் ரக்ஷிக்கிறது.

அப்படி ஒரு காலத்தில் போஷித்து வந்த காவிரி நதியானது பெற்றதாயே தனது குழவிகளைக் கொல்வதுபோல அழித்தல் என்னும் கொடுந்தொழிலைப் புரிய ஆரம்பித்து விட்டாள். பல வீடுகள் தரை மட்டமாகின. வண்டிகளும் மாடுகளும் அடித்துக்கொண்டு போகப்பட்டன. என்ன பரிதாபகரமான காக்ஷிகள்!

ஆங்காங்கு தோன்றிய மரங்கள் மாதர்கள் நீராடுகையில் உடலைமறைத்து, தலையை நீருக்குமேல் நீட்டித் தங்கள் சிகைகளை விரித்து விட்டதுபோலவும், காற்றில் அவைகள் ஆடும்போது நீரில் முழுகி எழுவதுபோலவும் தோன்றியது. அங்கு தோன்றிய தந்தி மின்சாரக் கம்பிகள் சிலந்திகள் இரை பிடிக்கப் பின்னிய வலைகள் போல் தோன்றின. இவ்வித கண்கொள்ளாக் காக்ஷியினைக் கண்டு ரயில்வே சாலையின் வழியாக நகருக்குத் திரும்பினோம். ஜல பாகத்தைக் கடந்து கோட்டை ஸ்டேஷனுக்கு அருகிலுள்ள மேம்பாலத்தை அடைந்தோம். அப்பொழுது நீர்கிழிய வெப்த சிலைபோல் ஈரோட்டிலிருந்து திருச்சி நோக்கி ஒரு ரயில் வண்டி கடுகிப் பாய்ந்து வந்தது. இத்துடன் இருப்பிடம் திரும்பினோம். நான் எழுதத் தொடங்கிய வியாசம் காவிரி வெள்ளம் கரைகடந்ததைப் போல் எனக்கு கொடுக்கப்பட்ட அளவைக் கடந்து விட்டதால் இத்துடன் முடித்துக் கொள்ளுகிறேன்.

உலகில் வழங்கும் பாஷைகள் 2750-ஆம்.

கடியாரங்கள் முதன் முதலாக 1476-ம் ஆண்டு செய்யப்பட்டதாம்.

உலகில் காலை 3 மணிக்கும் மாலை 6 மணிக்கும் இடையில் அதிகமான மரணங்கள் நிகழ்கின்றனவாம்.

லூஸிபேர் என்னும் முதல் தீக்குச்சிப் பெட்டி 1829-ம் ஆண்டு செய்யப்பட்டதாம்.

முதல் இரும்பு நீராவிக் கப்பல் 1830-ம் ஆண்டு கட்டப்பட்டதாம்.

தற்காலமாதிரியான ஊசிகள் முதன்முதலில் 1545-ம் ஆண்டில் பாவனைக்கு வரலாயின.

"ஒரு பெரீஇஇஇஇய அப்பா!"

ஓர் சிறு கதை

A. Nargunam.

அன்றைக்கு எனக்கென்னமோ, ஒன்றும் பிடிக்கவில்லை. புத்தகத்தைக் கையில் எடுத்தால் வேம்பாய் இருக்கின்றது. எனது எண்ணங்கள் எங்கெங்கேயோ செல்லுகின்றன. நான் சொன்னபடி கீழ்ப்படியாததற்காக அவனை நான் எத்தனையோ தடவைகளில் வைதிருக்கிறேன்; எனக்குப் பதிலாக கடைக்குப் போகாததற்காக அடித்துமிருக்கிறேன். ஆனால் நான் அவனுக்கிழைத்த தவறுகள்யாவற்றையும் இப்பொழுதுதான் உணர்ந்தேன். "சகோதர அன்பு ஓர் பொற்கயிறு போன்றது; அதை அறுத்தெறியாதீர்; உடன் பிறப்பு இல்லா உடம்பு பாழ், என்பதை செம்மையாய் உணருங்கள்" என்று எனது ஆசிரியர் சொன்ன வாக்குகள் "கணீர், கணீர்" என்று என் காதில் சப்தித்தன. என் அருமைத் தம்பி இப்பொழுது எங்கிருக்கின்றான்? இன்னும் பத்து வயதுகள்கூட பூர்த்தியாகவில்லையே! அதற்குள் கூற்றுவனுக்குற்ற பொறுமை தான் என்னே!! என் தம்பிமேல் அவனுக்கு அவ்வளவு பிரியமா? ஏன் அவன் என் தம்பியை அவ்வளவு சீக்கிரம் அழைத்துச்செல்லவேண்டும்? இவற்றையெல்வாம் எண்ணும்போது, என் மனம் உருகிப் பிளந்துவிடும்போலிருந்தது; என் இருதயம் விம்மி விம்மி வெடித்துவிடும்போல் இருந்தது. என்னாலும் அடக்கமுடியவில்லை. என் அருமைத் தம்பி இறந்து மூன்று மாதங்களாகியும், என் இருதயத்தினின்றும் அவன் நீங்கினானில்லை. ஆத்திரத்தை அடக்கமுடியாமல், என்னையுமறியாமல், அழுகை பிடுங்கிக்கொண்டு வந்துவிட்டது. விம்மி, விம்மி, அழ ஆரம்பித்துவிட்டேன்! எனது கண்துளிகள் நான் ஏந்தியிருந்த புத்தகத்தின் தாள்களை நனைத்தன. புத்தகத்தை மூடி மேஜையின் ஒரு மூலையில் எறிந்தேன். நான் கண்ணீர் வடிப்பதைப் பிறர் பார்க்கா வண்ணம் மேஜையின்மேல் குனிந்து எனது முகத்தை மறைத்துக்கொண்டேன்.

என் தம்பியைப்பற்றிய சிந்தனைகள் என்னை துன்புறுத்தின. சற்றுநேரம் சென்றது. நான் எங்கிருந்தேன் என்பது எனக்கே விளங்கவில்லை. உலகமே மங்கி இருண்டு விட்டது.

இவ்விருளில் நான் சித்தம் தடுமாறி தாறுமாருய் அங்குமிங்கும் அலைந்தேன். இவ்விருளை நீக்க சற்று தூரத்தில் ஓர் ஜோதி வஸ்து மெள்ளென தென்பட்டது. அச்சோதியை நோக்கி நான் விரைவுடன் நடந்தேன். ஆ! என்ன!! அச்சோதியில் எனக்கு அறிமுகமான முகம் ஒன்று தோன்றுகிறதே! ஆம். சந்தேகமில்லை; அவன் என் தம்பிதான்! எங்கிருந்தோ என் அருமைத்தம்பி என்னைத்தேடி புன்முறுவலுடன் வருகிருன்!! அடுத்த நிமிஷத்தில் என் தம்பியை நான் கட்டித் தழுவிக்கொண்டேன். என் தம்பியை ஆசையடங்க உற்று உற்று நோக்கினேன். அவனும் என் நேசப் பிரவாகத்தை தனது புன்முறுவலினுல் ஆமோதித்தான். இருவரும் ஆனந்த சாகரத்தில் ஆழ்ந்தோம். அவனது கண்களினின்றும் கண்ணீர் மளமளவென்று கொட்ட ஆரம்பித்தது. அதைக் கண்ட எனது கண்களும் ஆனந்தக்கண்ணீர் சொரிய ஆரம்பித்து விட்டன! பேச நாவெழாமல், இருவரும் சற்று நேரம் மௌனம் சாதித்தோம்.

"ஏண்டா, ராஜு, இத்தனை நாளாய் நீ எங்கடா போயிருந்தே? நீ செத்துவிட்டாயென்றல்லவா நான், அப்பா, அம்மா, எல்லாம் நினைத்திருந்தோம்?" என்று நான் ஆவலாய்க் கேட்டேன்.

"இல்லையண்ணு! அண்ணைக்கு நான் காய்ச்சலாயிருந்தேனில்லியோ, அண்ணைக்கு, இருந்தாப்போல, திடீரென்று, என்னை யாரோ எங்கேயோ தூக்கிக்கொண்டு போனுங்க. கொஞ்ச நேரம் பொறுத்து என்னை ஒரு **பேரிஇஇஇய அப்பா** மடிமேல் உக்காத்தினுங்க. எனக்கு அந்த அப்பாமேல ரொம்பவும் பிரியம் உண்டாய்டுத்து. அந்த அப்பாவும் நம்ப அப்பா மாதிரியே எம்மேல ரொம்பவும் பிரியப்படுகிருர். ஓங்கிட்டவரக்கூட, என்னை விடாரத்துக்கு அவருக்குப் பிரியமில்லை. அப்பறம் நான் அழுது கிழுதுதான் உத்தரவு வாங்கினேன்," என்ருன் என் தம்பி.

"ஏண்டா, ராஜு! நானும் வரேன்; என்னைக்கூட்டிக்கிட்டு அந்த **பேரிஇஇஇய அப்பா**க்கிட்ட போறியா?" என்றேன் நான்.

"ஊகும், அண்ணு! நான் வரும்போதே கேட்டேன்! அவர் சொன்னுலொழிய, கூட்டி வரவாணும் இண்ணுட்டார் அவர். சரி நேரமாவுது அண்ணு!............" என்று அவன் பேசிமுடியவில்லை. நான்பேச வாயெடுத்தேன். அதற்குள்

என் தம்பி எங்கேயோ மறைந்து விட்டான். இருள் எங்கும் சூழ்ந்துகொண்டது. இருளில் அங்குமிங்கும் அலேந்தேன். "ராஜு, ராஜு," என்று உரத்தக் குரலில் கூவினேன். ஒன்றும் பயனில்லே. மறுபடியும் அழ ஆரம்பித்துவிட்டேன்.

இச்சமயத்தில் யாரோ என் முதுகில் 'பட்'டென்று தட்டிய உணர்ச்சி ஏற்பட்டது. ஏறெடுத்துப்பார்த்தேன். என் தந்தை என்முன் கோபக் குறியுடன் நிற்பதைக் கண்டேன்.

"ஏண்டா, பயலே! உனக்குத்தூக்கம் என்னடா பிரமாதமா வந்துடுத்து? பரிக்ஷையெல்லாம் கிட்ட வந்துடுத்து, நீ என்ன படிக்கிற? பள்ளிக்கூடத்துக்குப் போக "டைம்" வேற ஆயுடுத்து? என்ன பண்ற நீ? வா வா, சுத்த சோம்பேறியாடுவ போலிருக்கே, சீக்கரம் கிளம்பு பள்ளிக்கூடத்துக்கு!" என்று என்மேல் சீறி விழுந்தார் என் தந்தை.

அப்பொழுது என் முகத்தை நீங்கள் பார்த்திருந்தால்...... எப்படியிருந்திருக்குமென்று நினேக்கிறீர்கள்?

சூசையப்பர்பட்டணம் பெற்றோர் சங்கத்திறப்புவிழா

27-9-39-ல் எம்மூர் ஆண் பாடசாலேயின் பெற்றோர் சங்கத்திறப்பு விழாவும் பரிசளிப்பும் சிவகங்கை ரேஞ்சு டெபுடி இன்ஸ்பெக்டர் ஸ்ரீமான் T. S. கல்யாண சுந்தரம் அவர்கள் தலேமையில் நிறைவேறியது. குழுமியிருந்த பெற்றோர், பெரியோருள், காளேயார்கோவில் பெற்றோர் சங்கத்தலேவர் ஸ்ரீமான் காத்தய்யா பிள்ளே அவர்களும் ஷெ கிராமக் காங்கிரஸ் கமிட்டி காரியதரிசி R. வெங்கடேஸ்வரய்யர் அவர்களும் எம் மதிப்பிற்குரியோராவர். பந்தய விளேயாட்டுகள், கல்வி, நன்னடத்தை, நல்ல ஆஜர் முதலியவற்றிற்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. அக்கிராசனுதிபதி இனியதோர் சொற்பொழிவாற்றினர். மாணவர் லூர்து நகரின் சிறுமி என்னும் சரித்திரத்தை நடித்துக் காண்பித்தனர்.

வந்தனேபசாரம், இராஜ வாழ்த்து, பாப்பரசர் வாழ்த்துடன் சங்கம் இனிது கலேந்தது.

A. சூசைபிள்ளே, காரியதரிசி.

பாடசாலை நிகழ்ச்சிகள்

(1) 11-11-39 இன்று மாலை 5 மணிக்கு, எமது பாடசாலை சபாமண்டபத்தில், சிவகிரி திருவாளர் மைக்கேல் ஆசிரியர் "பங்கிராஸ் அல்லது பூர்வீக சுரங்க சபையின் விருத்தாந்தம்" என்பதைப்பற்றி, தக்க பக்க வாத்தியம், கீதங்களுடன் அரியதோர் கதாபிரசங்கம் நிகழ்த்தினர்.

(2) 17-11-39. திருச்சியிலும், சுற்றுப்புறத்திலும் சென்ற மாதம் 14, 15, 16 தேதிகளில் கனத்த மழை பெய்ததால் (12 அங்.) நதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதைக் காண எமது பாடசாலை மாணவர்கள் உல்லாசப் பிரயாணம் செய்தனர்.

(3) 23-11-39-ம் தினத்தன்று மாலை 5 மணிக்கு, திருச்சி, எல்லைப்புற ராணுவப்படையினர் ஒரு பகுதியினருக்கும் (Second battalion Frontier Force Rifles), எம் பாடசாலை மாணவரின் ஒரு பகுதியினருக்கும், ஓர் "Volley Ball," பந்தய விளையாட்டு நடந்தேறியது. இருதிறத்தினரும் வெகு திறமையுடன் விளையாடினர். ஆனால் இறுதியில், எம் பாடசாலை மாணவர்களே இரண்டு ஆட்டங்களிலும் (two games to none) ஜயம் பெற்றனர். ஆட்ட இறுதியில், இரு பகுப்பினரும் ஒருவர்க்கொருவர் உபசாரங்கள் வழங்க, பந்தய விளையாட்டு இனிது முடிந்தது.

(4) 26-11-39. சங்கீதப் பாதுகாவலராம் அர்ச். **சேசீலியம்மாள்** விழாவை முன்னிட்டு எமது பாடசாலை **சங்கீதப் பகுதியினர்** திருச்சி பொன்மலை, திரு இருதய எலிமெண்டரி பாடசாலைக்கு உல்லாசசஞ்சாரமாய் அழைத்துச்செல்லப்பட்டனர். அங்கு அவர்களுக்கு, ஒரு **சிற்றுண்டி** நடத்தப்பட்டது.

இங்கலாந்தில் கி. பி. 1475-ல் காக்ஸ்டன் என்பவர் வெஸ்டுமின்ஸ்டரில் முதன்முதலாக அச்சுக்கூடம் ஸ்தாபித்தாராம், சலன அச்சு (Movable type) ஜான்கூடன்பர்க் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டதாம்.

விடு கதைகள்

S. Mudiappan

(1) தாது கோமழை கோவை பழுத்திட
தண்டில்லாத தாமரை பூத்திட
நீரில்லாத நெடுங்குளம் தன்னிலே
ஆளில்லாத இரண்டு அன்னங்கள் போகுதாம்
காலில்லாதவன் ஓடி மறித்திட
கையில்லாதவன் கட்டி அணைத்திட
வாயில்லாதவன் தின்ற கனிப்பழம்
வகையுடன் சொல்லும் மாதவ இராஜனே.

(2) வெள்ளி பித்தளை பூசி மினுக்குவாள்
போகவர எண்ணெய் வாழ்த்தி மெழுகுவாள்
சொன்ன காசுபணமும் பறிப்பாள்
சொல்லுக் கொருநாளும் வேசையல்லையே.

(3) மூன்றெழுத்தால் ஆனதொரு
முக்கியமான வெண்பொருள்
தலையெழுத்தும் கடையெழுத்தும்
தரையில் உள்ள மிருகமாம்.

(4) இராஜன் பவனி வருவதைப் பார்க்க வந்த, பெண், பின் வருமாறு கேட்டாள் :—

கரி எருது மேலேறி
கடைத்தெருவே வருகிறவரே
எரியுந்தணல் அவிப்பவர் மேல்
இருப்பவரை தருகிறீரா.

அரசன் கொண்டுவந்த பொருள் யாது ?

(5) காட்டில் வேட்டையாடச் சென்ற இராஜனுக்கும் ஒரு பெண்ணுக்கும் பின்வரும் சம்பாஷணை நடந்தது :—

அரசன் : எள்ளிலே பிறந்து எள்ளிலே வளர்ந்த இளைய இராஜாமகளே எள்ளிலும் சிறுவகையான எள்ளுண்டோ, சொல்.

பெண்: பூவிலே பிறந்து பூவிலே வளர்ந்து புவியாண்ட புத்தியுள்ள இராஜாமகனே, பூவிலும் சிறு வகையான பூவுண்டோ சொல்லும்.

(குறிப்பு) இருவரும் சொல்லிய பொருள் எது ?

(6) "ஆட்டை" சுட்டு "மாட்டிலே" வைத்தேன், "சே" வந்து தூக்கிற்று, "பே" கொண்டு எறிந்தேன், "சே" ஓடிப்போயிற்று, "பே" இரண்டாக போயிற்று.

(7) ஒரு மனிதன் தன்னை வழியில் சந்தித்த ஒரு பெண்ணிடம் உன் கணவன் பெயர் என்ன என்று கேட்க அவள் பின்வருமாறு சொன்னாள் :

"ஒரு ஆறு ஆறு
இருஆறு பன்னிரண்டு
மூவாறு பதினெட்டுக்கு முன் பிறந்த
நாலாறு இருபத்திநான்கல்லவோ என் நாயகன் பெயர்."

(குறிப்பு) குறித்த பெயர் என்ன ?

விடுகதை விடைகள்

(கொத்து: 30, மலர் 5, பக்கம் 99.)

1. ஆரடா தோட்டத்திலே பத்துடா மாட்டை.
2. ஆடு.
3. தென்னைமரம்.
4. நண்டு.
5. கிணறு.
6. பட்டம்.
7. தலைப்பாகை.
8. அம்மி.

Action Song

அபிநயப் பாட்டு (2-ம் வகுப்பு)

R. Pitchai Pillai.

பூனைகளும் அப்பமும்

(கும்மி மெட்டு)

1. திருட்டுத்தனமாய்ப் பூனைகள் இரண்டு,
குதித்து ஒரு வீட்டில் நுழைந்து,
இருட்டிலே ஒரு அப்பத்துண்டைக் கண்டு,
எடுத்து வெளியே வந்தனவே.

2. வந்த உடன் அந்தப் பூனைகள் இரண்டும்,
உனக்கு எனக்கு என்று சொல்லி,
குருட்டுத் தனமாய் முரட்டு வழியில்,
வறட்டு வம்புகள் செய்தனவாம்.

3. அந்த வழிவந்த தந்திரக்குரங்கு,
இந்தப் பூனைகள்தனை நோக்கி,
வஞ்சகமாகவே அப்பத்தைத் தின்னத்தான்,
நெஞ்சிலே வைத்தது எண்ணமுங்காண்.

4. "அப்பத்தை இப்போதே உங்களுக்கு நானே,
தப்பிதமின்றிப் பிரித்தளிப்பேன்,"
என்று சொல்லி ஓடிக் கொண்டுவந்தது ஓர்,
செட்டிக்கடையின் தராசுதன்னை.

5. துண்டு இரண்டாக அப்பத்தை நிறுக்க,
ஒன்றை ஒன்று கீழே தான் இழுக்க,
கண்ட அக்குரங்கு துண்டு இரண்டையும்,
துண்டித்துத் துண்டித்துத் தின்றதுவே.

6. இருந்த பூனைகள் வருந்திக் கண்ணீரைச்,
சொரிந்து வந்தனம் தான் புரிந்து,
"மிஞ்சிய அப்பத்தை ஈந்திடும், எங்களின்,
சஞ்சலம் ஓய்ந்திடும்," என்றன காண்.

7. கேட்டதும் குரங்கு தாட்டிகமாகவே,
"கூலி இல்லா வேலை செய்வாருண்டோ?
காலைப் பொழுதிலே ஞாயம் தீர்த்ததற்கு,
கூலி இது," என்று சாப்பிட்டதே.

8. வீணான சண்டைகள் ஆகாது கூடாது,
என்றறிவீர் நல்ல மாணவர்காள்,
இச்சித்த சொத்துக்கள் நிச்சயமாகவே,
எச்சமயமும் நிலைக்காதே.

ஆலமரம்

1. ஆற்றங்கரை யோரத்திலே
அழகான ஆலமரம்
காற்றடித்துப் பந்தலிட்டுக்
களிப்பான இடந்தருமே.

2. பச்சையிலைப் பந்தலைப்போல்
படர்ந்த நல்ல ஆலமரம்
பட்டப்பகலில் படுத்திருக்கப்
பரந்த நல்ல நிழல்தருமே.

3. மாலையில் பிள்ளைகளும்
வேலையால் களைத்தவரும்
சாலையில் நடந்தவரும்,
தங்க நல்ல இடந்தருமே.

182464.

Our Employment Bureau

FOR

MANAGERS OF SCHOOLS IN NEED OF TRAINED TEACHERS	TRAINED TEACHERS IN NEED OF EMPLOYMENT

Here is a typical letter from a Teacher who secured employment through this Bureau:

14—10—1939.

REV. FATHER,

As directed by you, I sent in my application and have been appointed as Head Master, Sri Krishna Vilas H. E. School, Kalangani, Salem Dt. I am very grateful to you for this help.

Yours obediently,
K. V. SUBBA RAO,
Old Student.

N.B.—Managers and Teachers wishing to be benefitted by our Employment Bureau are requested to send sufficient stamps for our reply.

Printed by Rev. Fr. A. Susai Regis,
Superintendent, St. Joseph's Industrial School Press, Trichinopoly.

சிறந்த கட்டுரைகள்! உயர்ந்த விஷயங்கள்!!

இன்பமிகு எளிய தமிழ் நடை!!!

ஆரம்ப ஆசிரியர்களுக்கு இன்றியமையாதது!!!

கல்வித்துறையில் கண்யம் பெற்று விளங்கும்

மாதப்பத்திரிகை!

எமது

போதனாவிஷய பூங்கொத்து

துரைத்தனத்தார் அவ்வப்போது பிறப்பிக்கும் கல்விச் சீர்திருத்தச் சட்டங்கள்; வித்யா இலாகா அதிகாரிகள் விடுவிக்கும் சுற்றறிக்கைகள்; நவீன கல்வி முறைகள்பற்றிய ருசிகரமான வியாசங்கள் பாடக்குறிப்புகள்; பள்ளிச் சிறுவர்க்கான பண்புமிகும் சிறுகதைகள்; அபிநயப் பாடல்கள்; யோசனாவிருத்திச் செய்யுட்கள்; மற்றும் கல்வி சம்பந்தமான அருப்பெரும் விஷயங்கள் பலபலகொண்டு மலர்வது நம் 'பூங்கோத்து.'

ஆரம்பப் பாடசாலைகளுக்கு அருமருந்துபோன்று, 30 வருடங்களாக அயராத் தொண்டாற்றி வந்துள்ள அரியதோர் சஞ்சிகை!!

[வருட சந்தா ரூபாய் **1** மட்டும்.]

இன்றே உங்களது பிரதிக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளுங்கள்!

விலாசம்:—பத்திராதிபர்,

"போதனாவிஷய பூங்கொத்து,"

R. C. போதனாமுறைப் பாடசாலை,

திருச்சினாப்பள்ளி.

POONGOTHU